செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௨] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஞு சித்திரை மீ ௧0 உ வெள்ளிக்கிழமை (23-4-1971) [இல-௯

## மக்களும் சமயமும்

செல்வி: உமாதேவி இளையதம்பி B. A. (Special) (Cey)

இப்பரந்த உலகிற் பல்வேறு மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பல்வேறு மொழியைப் பேசுபவர்களாகவும், பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்களாகவும், பலவேறு சமயத்தைக் கைக்கொள்பவராகவும் விளங்குகின்றனர். மனிதர்கள் தமது உள்ளக் கருத்தைப் பிறருக்கு விளக்கப் பயன்படுவதே மொழியாகும். ஆதிமனிதர் தமது உள்ளக் கருத்தைப் பல்வேறு ஒலிகள் வாயிலாக உணர்த்தினர். இவ்வொலி வடிவாகிய எழுத்துக்கள் பலசேர்ந்து சொற்கள் உருவாகின. பல சொற்கள் சேர்ந்து உருவான வாக்கியங்கள் மொழியை உருவாக்கின. ஆதிகால மக்கள் மிருகங்கள், மழை, காற்று முதலிய இயற்கைச் சக்திகளினின்றும் நம்மைப் பாதுகாக்கக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர் இத்தகைய பல குழுக்கள் சேர்ந்து பிற்காலத்தில் பல இனங்களாக உருவெடுத்தன ஒவ்வொரு இனத்தவரும் தமது பழக்கவழக்கங்களுக்கேற்பச சொந்த மொழியையும் கையாண்டனர்.

ஆதிகால மனிதர் தம்மைப் பாதுகாப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் செய்தபொழுதிலும் தம சக்திக்கு அப்பாற்பட்ட பொருள் ஒன்று உண்டு என்பதை நாளடைவில் உணரலாயினர். அறிவிலும் ஆற்றலிலும் தம்மிலும் மிககதொன்று இயற்கையில் ஊடுருவியோ அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டோ இருக்கின்றது என்னும் நம்பிக்கை மனிதரிடத்து உறுதிபெற்றது. அப்பெரிய பொருளோடு தொடர்பு பூணவும அதன் உதவியைப் பெறவும் மனிதர் அவாவுற்றனர். இத்தகைய சூழ்நிலையே சமயத்திற்குத் தோற்றுவாயாக அமைந்தது. இத்தகைய சூழ்நிலைகளின் பயனாக உலகில் பல்வேறுசமயங்கள்தோன்றின. இனி சமயம் என்றால் என்பதை ஆராய்வோம்.

சமயம் என்றால் காலம் அல்லது தருணம் என்று பொருள்படும். சமைக்கப்பட்டது தான் சமயம் என்று கூறுவோருமுளர். அதாவது மனிதரை நல்வழிப்படுத்தச் செய்யப்பட்டது தான் சமயம் என்பர். மார்க்கம் என்ற பதமும் சமயத்தையே குறிக்கும் மனிதனின் சிந்தனை சக்தியின் பயனாக உருவெடுத்ததே சமயமாதலின் கருத்து என்ற பொருள்படும் மதம் என்ற சொல்லும் சமயத்தையே குறிக்கும்.

உலகிற் பல்வேறு சமயங்கள் காணப்படுகின்ற பொழுதிலும் நான்கு மதங்களே முக்கியமானவையாகப் பெரும்பான்மையான மக்களாற் கைக்கொள்ளப்படுகின்றன. அவை இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், பௌத்த சமயம், இஸ்லாம் சமயம் என்பனவாம். பொதுவாக ஒரு சமயம் இருந்தால் அச்சமயத்திற்குத் தெய்வம் இருத்தல் வேண்டும். அத்தெய்வத்தை வணங்குவதற்கு மூலகாரணமாக அத்தெய்வத்தின் மேல நம்பிக்கை இருத்தல்வேண்டும் நம்பிக்கையை மனதிற் கொண்டு அத்தெய்வத்தை வழிபடுவதற்கு வழிபாட்டு முறை வேண்டும ஆகவே சுருங்கக் கூறுமிடத்துச் சமயம என்றால அதற்குத தெய்வமும் நம்பிக்கையும், வழிபாட்டு முறையும இருத்தல் வேண்டும.

இந்துசமயத்தில் சைவம, வைணவம், சாக்தம, காணாபத்யம்.

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

### சிங்கப்பூர்

ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயம்

4-4-71ல் நடைபெற்ற மலேஷியா இலங்கைத் தமிழர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ செண்பக விநாயகராலய திருவாசசபை உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பெற்றனர்.

தலைவர் திரு. கி. பாலசுப்பிரமணியம் காரியதரிசி வீ. விஜயசுந்தரம், துணை ககாரியதரிசி க. பூபாலசிங்கம் தனாதிகாரி ச. தங்கத்துரை, துணைத்தனாதிகாரி ஐ. நடராசா. நிர்வாகஉறுப்பினர்கள் திருவாளர்கள்: சு. மா. வாசகர், க. சண்முகசுந்தரம், ப. வேலுப்பிள்ளை, ம. தர்மையா. மு. குலசேகரம், அ. பரமநாதன், அ. வேலுப்பிள்ளை, க. வ. வேலாயுதம்.

உ
திருச்சிற்றம்பலம்

சேறிகழலுந் திருவடியுந்
தோன்றுந் தோன்றுந்
திரிபுரத்தை யெரிசெய்த
சிலையும் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த
நேர்மை தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும்
பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும்
வகை யுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும்
மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும்
பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம்
புனிதனார்க்கே.

திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசு சுவாமிகள்.

### சைவபரிபாலன சபை நிகழ்ச்சிகள்

காரைக்காலம்மையார் குருபூசை

ஷெ குருபூசை 12-4-71 அன்று நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. நாவலர் மண்டபத்தில் கடவுளாராதனை நிகழ்ந்த பின்பு பெரியபுராணம் -காரைக் காலம்மையார் புராணம் படித்துப் பயன் சொல்லப்பெற்றது.

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

21-4-71 புதன்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை சபை, நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் நடராஜர் பூசை, நால்வர் பூசை, புராண படனம்-பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம் - திருப்பூப்புகலூரில் முத்திப்பேறு, மாகேசுர பூசை நிகழ்ந்தன.

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனத்தில்

12-4-71 புதன்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகி கொண்டாடப்பெற்றது. நல்லை, ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோவில் வீதியில உழவாரத் திருத்தொண்டும். ஆதீனத்தில விசேஷ அபிஷேகம், விசேஷ பூசை மாகேசுர பூசையும், பகல 10 மணி தொடக்க 1 மணிவரை நடைபெற்றன. பிற்பகல் 3 மணி முதல் ஆதீன பிரசார மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் பாகவாத்திய சகிதம் "அப்பர் காட்டிய அருள நெறி" என்னும் பொருள் பற்றி இன்னிசை விரிவுரையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக தின அலங்கார உற்சவம்

வண்-மேற்கு அரசடி, விநாயகராலய கும்பாபிஷேகதின அலங்கார உற்சவம் 19-4-71 திங்கட் கிழமை தொடக்கம் தொடர்ந்து 10 தினங்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடனும், உற்சவத்துடனும் நடைபெறுகின்றன.

## தக்ஷிண கைலாச மான்மியம்

[ "சிவாகம ஞான பாநு சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி ]

[குருக்கள் ஐயா அவர்கள் சிவபதமடையமுன் எங்கள் பத்திரிகைக்கு வழங்கிய விஷயதானத்தின் எஞ்சிய பகுதி]

(முன் வளர்ச்சி — 10)

மாதர்கள் அருள்பெற்றமை

பூகபுரத்திலுள்ள ஒருபெண் விபசார முதலிய தீயொழுக்கமுடையவளாய் எங்குந் திரிந்து பூர்வசன்மங்களில் செய்த புண்ணிய வசத்தினால் கதிர்காமத் தலத்தையடைந்து, மாணிக்க கங்கையில் ஸ்நானம் பண்ணி கதிர்காமநாத சுவாமியாரது திருச்சந்நிதியிற் போய் சுவாமி தரிசனஞ்செய்து தான் அதுவரையிற் செய்த பாவங்களை நினைந்து "எமது தலைவரே! தேவரீரை வணங்கப்பெற்ற புண்ணியத்தினாலே யான் அறியாமையாற் செய்த சமஸ்தபாவங்களும் நீங்கும்படி திருவருள் செய்தருளுதல் வேண்டும் தேவரீருக்கு அடைக்கல"மென்று தேம்பித் தேம்பி அழுதுவேண்டினள். கதிர்காமநாதர் அவள் மீதிரங்கி சகல பாவங்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

சிவத்தமிழ்ச் செல்வி, செஞ்சொற் செம்மணி, சித்தாந்த ஞானாகரம், சைவப்புலவர், பண்டிதை

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு

மலேசியா சைவத் தமிழ்மக்கள் 7-4-71-இல் வழங்கிய

## வரவேற்புரை

நதிவருழன்
பதிமதுரைப்
பனிபடர்ந்த
கனிபடர்ந்த
நாவாடும்
பாவாடும்
கேட்டறிந்த
பாட்டறிந்து
வந்தாரை
செந்தாழை

மணல்கருழன்
பொய்கையிலே
மலைதழவிப்
சுவைதழுவிக்
நல்லறிஞர்
படியாடிப்
செவிப்புலனில்
வந்ததமிழ்ப்
வரவேற்று
மணமாய்நின்

நலம்வளர்த்த
பனிமலராய்ப்
பலதிறத்துக்
கருத்திலெலாம்
நினைவாடும்
பல்புதுமை
கேள்வியெனும்
பண்டிதையே!
வாழ்த்துரைக்கும்
சீர்சிறக்க

தமிழணங்கு
பூத்ததுவும்
கலைதழுவி
நிறைந்ததுவும்
பொருளாகி
புரிந்ததுவும்
தேனிறையப்
பெருஞ்செல்வி
மலைநிலத்தில்
வரவேற்போம்!

முன்னம்
தன்னை
புகையால்
தொகையாயத்
ஒருருவாய்
சீரும்
தம்பால்
தம்பதியர்
சிவத்தமிழ்ச்
உவப்பினால்

இருள்விரட்டும்
மறந்து
மணத்தைப்
தனைச்சிதைக்கும்
ஆக்கி
தமிழ்மரபும்
உலகணைக்கும்
ஈன்றளித்த
செல்வி!
சிவப்பழத்தை

முனைப்பினால்
தானுருகும்
பொதுமையோடும்
துய்யநறும்
உலகினுக்குத்
தப்பாஅப்
தையற்
சைவப்
செஞ்சொற்
விளைந்து

ஒளிவழங்கி
மெழுகினையும்
புகப்பரப்பித்
பத்தியையும்
தரும்நகையால்
பாக்குட்டி
பிள்ளையெனும்
புலவீர்
செம்மணியே!
வரவேற்போம்!

மதுரைஆ
சிதம்பரமாம்
காஞ்சிஸ்ரீ
வாஞ்சையுடன்
ஈண்டெமக்கும்
தாண்டவத்தின்
சமயந்
சமயம்
ஆறுகளாய்
பேறுகொள்

தீனத்து
காரைநகர்
மெய்கண்டார்
கேட்டிருந்த
கேட்க
தத்துவத்தைத்
தெரியாமல்
தனைஉணர்த்தச்
வந்து
மலேசியத்தின்

மண்டபழம்
சிவன்கோவில்
ஆதீன
வண்ணத்
இசைந்துவரும்
தரவரும்நல்
தவிப்புறழும்
சமயத்தில்
பெருங்கடலாய்க்
பெருமையினால்

ஈழத்துச்
மண்டபழம்
மண்டபழம்
தமிழ்முழக்கம்
சிவமணியே
வித்தகமே!
நெஞ்சின்பால்
வருமருந்தே!
கூடிவிடும்
வரவேற்போம்!

சங்கமாய்
பொங்குமாக்
இங்குமா
தங்கம்மா
இங்குமா
பொங்குமாக்
எங்குமா
தங்கம்மா!
தங்கம்மா
இங்கே
அறிவனை
வறிவினை

மேவும்
கடலில்
வந்ததென
வருகையினைத்
இக்கூட்டம்
கடல்தோற்கப்
யோங்கும்
தகைமணியே!
எனவழுத்தி
வரவேற்போம்
அறிந்திடும்
அறிவிப்பாய்

தமிழ்நிலத்துக்
புறப்பட்ட
எழுந்தக்கால்
தமிழோடு
என்றுயர்ந்து
புறப்பட்டார்
இறைவன்
தமிழறிந்தார்
தமிழம்மா
யாம்!
அறிவதே
வருக!

கரைதோட்டு
அலையோன்றே
வந்ததிரை
சொன்னதுகாண்!
போமாறு
தமிழரெலாம்
கழல்பரவும்
இதயமெல்லாம்
துணையிருத்தி
அறிவாம்அவ்
வருக!

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதகிருது ௵ சித்திரைமீ ௧௦-௨ வெள்ளிக்கிழமை [1971]

## ஐந்தெழுத்துப் பவக்கடல் கடக்க உதவும் தெப்பம்

திருநாவுக்கரசு நாயனுர் சமணராகவிருந்த காலத்தில் திலகவதியாருடைய தவத்தின் பேருக திருவைந்தெழுத்தின் உபதேசமும், திருநீற்றின் சாதனமும் பெற்றுச் சைவரானுர். சமணர்கள் மனம் சகிக்கவில்லை. தங்கள் மதத்திற்கு இழுக்குவந்ததென அஞ்சி அரசனுடைய உதவியைப் பெற்று அவரைக் கொலைசெய்ய வழிதேடினுர்கள். சுண்ணும்பறையில் அடைத்தார்கள். யானையை இடறவிட்டார்கள், நஞ்சு கலந்த பாற்சோற்றை உதவினுர்கள். இறைவனருளால் அவர் எல்லாத் தீமைகளிலும் தப்பினுர். கடைசியாக கல்லுடன் கட்டி ஆழமான கடலிற் போட்டார்கள். அப்பொழுது அப்பர் சுவாமிகள் "எவ்வாறுயின் நிலைவரினும் வருக. எந்தை பெருமானைத் துதிப்பேன்" என்ற துணிவுடன "சொற்றுணை வேதியன்" என்னுந் தூய திருமொழிகளை முதலாகவுடைய நமச்சிவாயப் பதிகத்தை ஓதினுர். கல்லு மிதந்தது, கட்டிய பாசங்கள் அறுந்தன. திருநாவுக்கரசர் கல்லின்மேல் ஞானவொளியுடன் விளங்கினுர்.

இருவினைப்பாசமும் மலக்கல்லிற் கட்டிட வரும் பாசத்தை அறுத்து பிறவிப் பெருங்கடலில் வீழும். எல்லா மாக்களையும் அக் கடலில் அழுந்தாமற் கடக்கச் செய்து முத்திக் கரையை யடைவிக்க வல்ல திருவைந்தெழுத்து நாவுக்கரசர் பெருமானை சமணர்கள் சேர்த்துக் கட்டிய கல்லே தோணியாக மிதக்க அவரைக் கரையேற்றியது ஓர் அற்புதமோ ?

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேற்றிட
வருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ.

பஞ்சாக்கரம் ஆதி மந்திரம். சிவனை அடைவிக்க வல்ல மந்திரம், நற்றுணையாகவுள்ளது. ஓதுகின்றவர்களை நன்னெறிக் குய்ப்பது. பஞ்சாக்கரமே நன்னெறி. எவ்வகையான துக்கம் வரினும் தன்னை எண்ணுவோரை முன்னின்று காவல் புரிவது சிவன் திருநாமமாகிய ஐந்தெழுத்து.

மக்கள் தங்கள் துன்பந்தீர ஒரு சற்குருவினிடம் தீட்சைபெற்று பஞ்சாக்கரத்தை ஓதி நன்மையடைவார்களாக நாட்டிலுள்ள இன்னல்கள் நீங்கும்.

## புதிய ஆண்டு நலந் தருக

புதிய ஆண்டு 14-4-71ல் பிறந்துவிட்டது. நமது நாட்டு மக்கள் அமைதியான முறையில் வழமையான கொண்டாட்டங்களையும் கேளிக்கைகளையும் விழாக்களையும் தவிர்த்து அரசியற் கட்டுப்பாடுகளுக்கமைய அமைதியான முறையில் புதுவருடத்தைக்கொண்டாடினுர்கள். நாட்டின் நலனைக் குறித்து மக்கள் தங்கள் கொண்டாட்டங்களைக் குறைத்துக்கொண்டமை போற்றத் தக்க செயலாகும். நாட்டினது அரசாங்கம் சனநாயக முறைப்படி நடைபெறுவதற்கு ஒவ்வொரு பிரசையும் உதவி புரிதல்வேண்டும். அரசாங்கத்தைக் கைப்பற்றச் சதிவேலைகள் புரியும் புரட்சிக்காரருடைய முயற்சிகளை முறியடிக்கவேண்டிய உதவிகளை ஒவ்வொரு பிரசையும் புரிவது இன்றியமையாத கடனுகும். சதிகாரரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுங் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிசாருக்கும் முப்படை வீரர்களுக்கும் எங்கள் பாராட்டு உரித்தாகும். நாட்டினது நலனைக் குறித்து அவர்கள் இராப் பகல் காடுகளிலும் மேடுகளிலும் துப்பாக்கிமுனையில் கடமை புரிந்து வருகின்றுர்கள்.

நாட்டின் நலனைப் பேணுமுகமாக நாங்கள் அரசாங்கத்துக்கு வேண்டிய உதவிகளைப் புரிதற்குக் கடமைப்பட் டிருக்கின்றேம். நாட்டின் நலனுக்காக நாங்கள் எவ்வித தியாகத்தையும் புரிய ஆயத்தமாகவிருத்தல் வேண்டும்.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

சகல வளங்களும் நாட்டில் நிறைந் திருந்தாலும் வேந்தனேடு மேவுதலில்லாத நாடு பயனுடைத்தன்று. வேந்தமை யென்றமையினுல் குடிகள் வேந்தன்மாட்டன்பும், அவன் குடிகள்மாட் டருளு முடையவனுதலும் அடங்கின.

வாசக அன்பர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் நாட்டில் சமாதானமும் வளங்களும் பெருக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சிவத்தமிழ்ச் செல்வி, சைவப்புலவர்
பண்டிதை, தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள்

## மலேஷியாவில் சமயப்பிரசாரம்

நமது ஈழநாட்டில் சைவசமயம், தமிழ்மொழி வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் சைவப்புலவர், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இப்பொழுது மலேஷியாவில் அரிய சைவசமய விரிவுரைகள் நிகழ்த்தி மக்கள் உள்ளங்களில் சிவன் பாலன்பைப் வளர்த்து வருவதாக, சிங்கப்பூர் சைவ அன்பர் திரு ஐ. இராஜா அவர்கள் தெரிவிக்கின்றுர்கள். இவர் முன்னுள் நாரந்தனையிலிருந்து சென்று சிங்கப்பூரில் காணியளவுப் பகுதியில் உயர் பதவியில் கடமையாற்றிய திரு. ஆ. நாகநாதர் அவர்களினது மருகரும் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அதிபாரக் கடமையாற்றிய திரு ஐ. சின்னத்துரை அவர்களது தமையனுமாவர்.

சிவத்தமிழ்ச் செல்வி, செஞ்சொற்செம்மணி,
சித்தாந்த ஞானகரம், சைவப்புலவர், பண்டிதை
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

### சொற்பொழிவுகள்

ஸ்ரீ கந்தசுவாமி கோவில், ஸ்கொற் வீதி, கோலாலம்பூர்

12-4-71 திங்கட்கிழமை — முருகக் கடவுள் வழிபாடு
13-4-71 செவ்வாய்க்கிழமை — ஆறுமுகநாவலர் சிந்தனைத்திறன்
25-4-71 சனிக்கிழமை — சேக்கிழாரின் செந்தமிழ்ப்புலமை

விவேகானந்தா ஆச்சிரமம், கோலாலம்பூர்

7-4-71 புதன்கிழமை — கணபதியின் கடாட்சம்

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில், பெற்ருலில் ஜயா,

21-4-71 புதன்கிழமை — பட்டினத்தார் பாடல்

ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில், 163, ஜலா பண்டார் கோலாலம்பூர்.

14-4-71 புதன்கிழமை — சிறப்புச் சொற்பொழிவு

## தக்ஷிண கைலாச மான்மியம்

( 1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

களையுந் தீர்த்து ஞானத்தைக் கொடுத்தருளினுர். அவள் ஞானத்தைப் பெற்று நிட்டைகூடி முத்தியடைந்தாள்.

இன்னும் புத்தளத்திலுள்ள ஒரு கன்னிகையும், நிரும்பலாபுரத்திலுள்ள சில பெண்களும் கதிர்காம தலத்திற்போய்க் கதிர்காமேசரைவழிபட்டு அவரருளால் ஞானம் பெற்று முத்தியடைந்தார்கள்.

பாவிகளானுலும் புண்ணியர்களானுலும் கதிர்காம தலத்தில் வாசஞ்செய்தவர்கள் போகமோட்சத்தை எய்துவார்கள். கதிர்காமத்தைக் குறித்து யாத்திரை செய்யப் புறப்பட்டுச் சென்று பறப்பிலாத தியானமுள்ளவர்களாய் விநாயகமலையிற்போய் விதிப்படி கணேச தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, நித்திய கருமம் முடித்துக்கொண்டு விநாயகக் கடவுளைப் பூசித்து அவருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு மெய்யன்புடன் கதிர்காமநாதரைத் தியானித்துக்கொண்டு, கதிர்மாம மலையின்மீதுபோய் நவகங்கா தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி சுவாமி சந்நிதானத்தையடைந்து அம்மலையின்மேலுள்ள சிந்தாமணி ஆலயத்தில் வள்ளி தெய்வதயானையம்மை சமேதராய் வீற்றிருந்தருளும் சுப்பிரமணியக் கடவுளை வழிபட்டுத் துதிப்பவர்கள் இவ்வுலகில் நெடுங்காலம் சுகமாக வாழ்ந்திருந்து முடிவில் நித்தியானந்த முத்தியைப் பெறுவார்கள். மாணிக்க கங்கையில் ஸ்நானம்பண்ணிக் கதிர்காம தலத்தில் கதிர்காமநாதரைத் தரிசிப்பவர்கள் போகமோக்ஷத்தைப் பெறுவார்கள். இப் புராணக் கதையைத் தினந்தோறும் அன்புடன் பாராயணஞ் செய்பவர்களும், கேட்பவர்களும் விரும்பிய பேறுகளைப் பெற்றுச் சீவன்முத்தராவார்கள்.

என்றிவ்வாறு சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளான முனிவர்களுககு உபதேசித்தார்.

(முற்றும்)

திருச்சிற்றம்பலம்

## மக்களும் சமயமும்

1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பத்தியம், கௌமாரம், சௌரம் முதலிய ஆறுபிரிவுகள் உள்ளன. சைவர்கள் சிவனையும், வைணவர்கள் விஷ்ணுவையும், சாக்தர் சக்தியையும் காணுபத்தியர் கணபதியையும், கௌமாரர் முருகனையும், சௌரர் சூரியனையும் வழிபடுகின்றனர். கிறீஸ்தவர்கள் யேசு கிறீஸ்துவின் போதனைகளைப் பின்பற்றுகின்றனர். புத்த சமயத்தவர்கள் புத்தபிரானின் போதனைகளையும், இஸ்லாம் சமயத்தவர்கள் முகமது நபியின் போதனைகளையும் பின்பற்றுகின்றனர். இச்சமயத்தவர்கள் தமது சமய உண்மைகளை நிலைநிறுத்துவதற்கு அவ்வச் சமயத்தைச்சேர்ந்தசாஸ்திரங்கள் உறுதுணை புரிகின்றன.

பைபிள் கிறிஸ்தவ மதத்தினரின் சாஸ்திரமாகும். புத்தமதத்தினர் தம்மபதாவைத் தமது சாஸ்திரமாகக் கொள்ளுகின்றனர். இவ்விதம் உலகின் பல்வேறு வகைப்பட்ட மக்கள் தமது காலச் சூழ்நிலைகளுக்கேற்ப பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டனர்.

சமயத்தின் முக்கிய அம்சமான வழிபாட்டு முறையைப்பற்றி ஆராயுமிடத்து பலவேறுபாடுகள் காணப்படுவதை அறியலாம். கோயில் வழிபாடும், விரத முறைகளும் பல்வேறு சமயங்களிலும் முக்கியவிடம் பெறுகின்றன. ஆனுல் அவை சமயத்திற்குச் சமயம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. சமயங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கே பல கிரியை முறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுட் பிரார்த்தனை செய்யும்பொழுது இரு முறைகளைக் கையாளுகின்றனர். ஒன்று மனதினுற் பிரார்த்திப்பது. மற்றென்று கிரியைமுறைகளைக் கைக்கொண்டு வணங்குவது, மனதினுற் பிரார்த்திப்பது பெருமளவு மனவடக்க முடையவர்களுக்கே கைகூடும். எனவே இதர மக்கள் மனவடக்கத்தைப் பெறுவதற்குத் தமது புற வாழ்க்கையை முதலிற் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. புறவாழ்க்கைக் கட்டுப்பாடுகளுக்குக் கிரியை முறைகள் சமயத்திற்குச் சமயம் மட்டுமல்ல காலத்திற்குக் காலமும் வேறுபடுவதை நாம் அவதானிக்கலாம்; மனிதன் தன் ஆன்மலாபத்திற்கு இன்றியமையாத இக்கிரியை முறைகளைத் தன் வசதிக்கும் சூழ்நிலைக்கும் தக்கபடி மாறறி அமைப்பதே இவ்வேறுபாட்டிற்குக்காரணமாகும்.

இப்பல்வேறு சமயங்களுள் இந்துசமயமே மிகப் பழமை வாய்ந்ததென்பது அறிஞர் கருததாகும். ஏனெனில் ஏனைய சமயங்களை உண்டாக்கியவர்களின் காலத்தை நாம் சரித்திர வாயிலாக அறியமுடிகின்றது. கிறீஸ்தவ சமயத்தை யேசுகிறீஸ்துவும், புத்த சமயத்தைப் புத்த சமயத்தைப்புத்தரும், இஸ்லாம் சமயத்தை முகமது

வளர்ச்சி 3ம் பக்கம்

## ஸ்ரீ முத்துவிநாயகர் சுவாமி கோவில் வருடாந்த ரதோற்சவம்

விரோதிகிருத வருடப் பிறப்பன்று (14-4-71) கொழும்பு செட்டியார்தெருவில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பஞ்சமுக முத்துவிநாயகர் வழமைபோன்று அலங்கரிக்கப்பெற்ற ரதத்தில் அடியார்கள் திருமுறைகள்ஓத, வேதியர்கள் மந்திரம் ஜெபிக்க, சங்கு முழங்க, மேளவாத்திய நாத இன்னிசை ஒலிக்க, வெற்றிக் கொடிகள் சகிதம் எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினர்.

காலை எட்டு மணிக்கு ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் தேருக்கு எழுந்தருளினர். கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கண்டு யாவரும் கண்ணீர் மல்கினர்கள். பல சைவப் பெரியார்களும் இவ்வருட ரதோற்சவத்திற்குப் பல வகையில் உதவி அளித்துள்ளார்கள். நாட்டின் காவல்துறையினர் அளித்த ஒத்துழைப்பு மிகவும் போற்றத்தக்கது. (நவி)

## மக்களும் சமயமும்

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

நபியும் தோற்றுவித்தனர் என்பது உலகறிந்த உண்மை. எனவே இச்சமயங்கள் கால எல்லைக்குட்பட்டன என்பது வெளிப்படை. ஆனல் இந்துசமயத்தைத் தோற்றுவித்தவர்பற்றிச் சரித்திரம் எமக்குச் செய்தி தரவில்லை.

இச்சமயங்களுக்கிடையே ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. எல்லாச் சமயத்தவர்களுக்கும் தமது சக்திக்கு அப்பாற்பட்ட பரம்பொருள் ஒன்று உண்டென்று கருதி அதன் மீது நம்பிக்கை வைக்கின்றனர். புறக்கரணங்களையும் அகக்கரணங்களையும் அடக்கி மனதை ஒருமுகப்படுத்த வழிபாடு இன்றியமையாதது எனக் கருதுகின்றனர். அதாவது தியானமும், பக்தியும் சமய வாழ்க்கையில் முக்கியவிடம் பெற வேண்டுமென்பது சமயங்கள் எல்லாவற்றினதும் கோட்பாடாகும். ஒருவன் செய்யும் செயலுக்கு அதாவது கர்மத்திற்கு ஏற்றபலன் வந்தே தீரும் என்ற கர்ம விதியில் இந்து சமயமும் புத்த சமயமும் நம்பிக்கை கொண்டுள்ளன.

மக்கள் அனைவருடைய சமய வாழ்விலும் ஒழுக்கம் முக்கியவிடம பெறுகின்றது. உள்ளத் தூய்மை ஒரு சிறந்த சமயவாதிக்குரிய இலட்சணமாகும். அதையே திருவள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

எனக் கூறியுள்ளார்.

இவ்வுலகிற் பிறந்த உயிர்கள் அனைத்தும் இறைவனைத் தொழுது ஆன்மஈடேற்றம் பெற வேண்டுமென்பதே எல்லாச் சமயங்களினதும் நோக்கமாகும். உலகிற்குச் சேவை செய்து மனிதப்பிறவியின் பயனையடையும் மார்க்கத்தையே எல்லாச் சமயங்களும் எடுத்தியம்புகின்றன. அதனையே பகவத் கீதையும் மக்கள் அனைவரும் பற்றற்றுப் பலனை எதிர்பாராது கடமையைச் செய்யவேண்டுமெனக் கூறுகின்றது.

பொதுவாகக் கூறுமிடத்து மனித வாழ்க்கையைப் பயன்பெற அமைக்க வழிகோலுவதே சமயம் ஆகும் எனவே மக்கள் எச்சமயத்தவராக இருப்பினும் தமது சமய வாழ்வைச் சிறப்புடன் கைக்கொள்வராயின் உலகிற்குச் சிறந்த பயனை அளிக்க முடியும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம் M B 10930

யாழ்ப்பாணம் நல்லூர் பருத்தித்துறை வீதி

1. சின்னத்தம்பி இரத்தினசபாபதியும் மனைவி 2. மகேஸ்வரியும் —வழக்காளிகள்

எதிராக

திருநெல்வேலி 1. அரியகுட்டி நடேசவும் மனைவி 2; சண்முகவடிவு —எதிராளிகள்:

M B / 10930 -ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1971-ஆம் ஆண்டு மே (வைகாசி)மீ 25-ம் திகதி (25—5—71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2000/- மேலும் 1000/- ரூபாவுக்கு 30 –6 –69 தொடக்கம் 31—3 –70 வரைக்கும் 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 291– 85 சதமும் வெண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும். இதில் ரூபா 400/- குறைவு

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலியிறை 'ஒட்டுப்பக்கிறையான் குடியிருப்பு" நிலப்பரப்பு 22 இணைறும், வீடும், பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சின்னப்பு தம்புவின் உரிமைக்காரர்களுக்குமுரிய ஆதனமும். மருபேர்களுக்கும் வடக்கு றேட்டும். சின்னப்பு தம்புவின் உரிமைக்காரர்களினுதனமும். மேற்கும், தெற்கும் ஒழுங்கை. இதில் சொரியலாய் நிலப்பரப்பு 2ம் அதைச் சேர்ந்தவைகளும். பதிவு D 269/240

"இராச கிரி"
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்,

வி. செ. குட்டிப்பிள்ளை
கோட் கொம்மிசனரும்,
ஏலவிற்பனவாளரும்,
விலைமதிப்பாளரும்.
எம் 11 9-4-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

புத்தூர் ஐக்கிய பண்டகசாலையின் தலைவரும் காரியதரிசியுமாகிய புத்தூர் கிழக்கு 1. சுப்பிரமணியம் சதாசிவம்
2. மாணிக்கம் தியாகராசா —வழக்காளிகள்

வழ: இல. M B 8151 எதிராக

ஆவரங்கால் 1. கதிர்காமு சின்னத்துரையும் பெண்
2. நல்லபிள்ளையும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் மேற்படி M B 8151-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணும் நாலு துண்டுக் காணிகள் 1971-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி (5—5—71) புதன்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் அவ்வக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3100/- அதற்கு 10-2-1958 தொடக்கம் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 435-65 இதில் 3-6-64 ல் கொடுத்த ரூபா 1000/- கழிபட வேண்டும்.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை 'உலக்கப்புலம்' வி. பர. 34½ இணறும் இதற்கெல்லை கிழக்கு கயிலாயர் பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு முருகர் பரமுவினுதனம். மேற்கு தம்பு பெண் கதிராசிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலிற் சொரியலாய் 1/8 பங்கு, பதிவு யாழ்ப்பாணம் K 97/154.

2. ஷை ஆவரங்கால் இறை 'நச்சங்கட்டு வயல்' கெ பர 105, இதில் விந்தமாக கெ பர. 6 இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் சண்முகம் நல்லதம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு சபாபதி ஐயரினுதனம். இதடங்கலும். பதிவு K 97/156

3. ஷை ஆவரங்கால் இறை "பெரியசீமா வி பர 14, 5/8 பனைகளும். இதற்கெல்லை கிழக்கு அம்பலம் பெண் சவுந்தரிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சின்னப்பு பெண் சோதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு பரமுவுகரும் பெண் பாறுபதிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு பாதையும் கந்தையா தாமோதரம்பிள்ளையினுதனமும். இதடங்கலில் ஆறிலொந்தில் சொரியலாய் நாவிலொன்று அதாவது சொரிபலாக 5/24 பங்கு. பதிவு K 201/138.

4. ஷை ஆவரங்காலிறை 'பொய்யன் சீமா' வி பர 1, 1/8 பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கும் மேற்கும் சின்னத்தம்பி பரமுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு அம்பலம் பெண் சவுந்தரிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாக நாவிலொரு பங்கு, பதிவு K 201/138

S. இரத்தினசபாபதி, J. P
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

டிரேசன் றேட்,
கோண்டாவில், 25-3-71

எம். 14. 23-4-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 11054

நீர்வேலி தெற்கு நீர்வேலி வல்லிபுரம் நல்லையா -வழக்காளி

எதிராக

கோண்டாவில் மேற்கு கோண்டாவில் செல்லப்பா செல்வரத்தினம் தனக்காகவும் தனது காலஞ்சென்ற பெண் செல்வமணியினுதனங்களின் தத்துவ பிரதிநிதியாக யாழ்ப்பாணம் பெரியகோட்டு தத்துவ வழக்கு இல. A 1121-ல் நியமிக்கப்பட்டவருமாக —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 11054ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம ஆண்டு வைகாசிமீ 22-ந் திகதி (22—5-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 8209-ம் 21-8-69 தொடக்கம் 7-12-69 வரைக்கும் ரூபா 5000 -க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 460-50,

### ஆதன விபரம்

பிரசித்த நொத்தாரிஸ் ஆ. தனபாலசிங்கமவர்கள் இல. 3810 தேதி 31-3-62ல் ஈட்டுறுதி எழுதிய காணியில் சகல உருத்து உரிமை சேர்ந்த யாவற்றையும் சர்ட்டுதல் செய்யப்பட்டுள்ள கீழ் சொல்லிய காணியாவது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று கோண்டாவில் இறை ஆரியன் காடு மடையரோடை பரவில இலா 4 கிணற்றில் பங்கு, இதற்கு எல்லை கிழக்கு இராசலிங்கம் துரைசிங்கத்திற்கும் பேரின்பநாயகம் பெண் இரத்தினம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு கையொழுங்கை, மேற்கு கந்தப்பிள்ளை இளையதம்பிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு பொன்னுத்துரை பெண் நேசம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்:

நா. ஸ்ரீ இரங்கநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

20 பெருமாள் கோவில் வடக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம், 5-4-71.

எம். 17. 23

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 11671

(1) பரணி ரூபசிங்கம் கைம்பெண் சரஸ்வதி கோண்டாவில் —வழக்காளி

எதிராக

(1) வைரவி செல்வரத்தினம் பெண் கோண்டாவில்
(2) பாறுபதி யாழ்ப்பாணம் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 11671-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ம் திகதி (15-5-71 சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 5801-75ம் 8-5-70 தொடக்கம் 3-10-70 வரைக்கும் ரூபா 4980க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 432-55.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பிரிவு நல்லூர் இறை கோண்டாவில் 'கோழியவத்தை' நிலப்பரப்பு 5½ இதில் மேற்குப் புறமாக 3½ பரப்பும் பயிர்களும் மிகுதிக் காணியின் தெற்கெல்லையில் உள்ள கிணற்றின் பங்கும் வழி வாய்க்கால் உருத்தும். இங்கு சொல்லப்பட்ட காணிக்கு கிழக்கேயுள்ள தெருவுக்குப் போவதற்கு மிகுதிக் காணியின் தெற்குப் புறமாகவுள்ள 5 அடிப் பாதை உரிமையும்.

சொல்லப்பட்ட இந்நிலப் பரப்பு 3½க்கும் எல்லை கிழக்கு வைரவி நவரத்தினத்தின் ஆதனமும், எல்லை வடக்கு கார்த்திகேசு பெண் பாக்கியத்தினது ஆதனமும், எல்லை மேற்கு வைத்திலிங்கம் பெண் பொன்னம்மாவினது ஆதனம். எல்லை தெற்கு குணநாயகம் பெண் கனகம்மாவினது ஆதனம். இதடங்கலும்.

வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
6-4-71.

சி. ஆ. த. வடிவேலு, J. P.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்:
எம். 15 23—4—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம். நல்லூர், செட்டித்தெரு,
இராமு சடையர் நாகலிங்கம் —வழக்காளி

இல. M B 7272 எதிராக

மண்டைதீவு இராமலிங்கம் நாகலிங்கம் —எதிராளி

M B 7272ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனங்கள். 1971-ம் ஆண்டு மே (வைகாசி) மீ 29-ம் திகதி (29—5—71) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வவ்வாதானத்துள் நின்ற பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 1493-50 சதமும் மேலும் 1000/- ரூபாவுக்கு 26—2 –65 தொடக்கம் 7—11—66 வரைக்கும் வருடமொன்றுக்கு 15% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 303-75 சதமும் வெண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று மண்டைதீவு இறை 'கூத்தான் குளக்கரை' நிலப்பரப்பு 12 பயிர்களும், கிணறுகளும் இதற்கு எல்லை கிழக்கு: நாகலிங்கம் சதாசிவலிங்கத்தினுதனம். வடக்கு நாகலிங்கம் நடராசாவினதும் சிவப்பிரகாசம் மனைவி சோதிபம்மாவினதுமாதனம். மேற்கு சுப்பிரமணியம் வெற்றிவேலுவுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு வேலுப்பிள்ளை மனைவி அன்னம்மாவுக்கும் வேலுப்பிள்ளை அன்னலிங்கத்துக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். இது முழுவதும் இதைச் சேர்ந்தவைகளும்.

2 ஷை மண்டைதீவு இறை 'ஆத்தியடி' நிலப்பரப்பு 6 இணறும் செய்பயிர் வான்பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு: வயித்திலிங்கம் செல்லத்துரைக்கும பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு: அருணாசலம் மனைவி தையல்ம்மாவினுதனம், மேற்கு : கார்த்திகேசு நடராசாவினுதனம், தெற்கு: றேட், இது முழுவதிலும் சொரியலாய் அரைவாசிப் பங்கும், அதைச் சேர்ந்தவைகளும்.

3. ஷை மண்டைதீவு இறை 'புளியடிதோட்டம்' நிலப்பரப்பு 18 வீடும், கிணறுகளும், செய்பயிர், வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு: நாரணபிள்ளை வெற்றிவேலுவினுதனம், வடக்கு மணல் றேட் மேற்கு பசுபதிச்செட்டியார் மனைவி நாகமெட்சமிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு சித்திவிநாயகபிள்ளையாருக்கும்; நாரணபிள்ளை வெற்றிவேலுவுக்குமுரிய ஆதனம். இது முழுவதும்.

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம் 20-4-71.

வி. செ. குட்டிப்பிள்ளை
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனவாளரும்
எம். 18 23—4—71

## யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபை நடாத்தும்

# சைவசித்தாந்தத் தேர்வுகள்

இவ்வாண்டுச் சித்தாந்தப் பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர் தேர்வுகள் எதிர்வரும் ஆவணி மாதம் 24, 25, 26 ஆம் தினங்களில் (9, 10, 11—8—71) நிகழும்.

இத்தேர்வுகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் வைகாசி மாதம் 8-ம் நாள் (22-5—71) அல்லது அதற்கு முன் தேர்வுச் செயலாளரிடம் சேரத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும்.

தேர்வு விண்ணப்பங்கட்கும், ஏனைய விபரங்கட்கும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

தேர்வுச் செயலாளர்,
சைவபரிபாலன சபை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல. M. B. 6856

1 நல்லதம்பி கைம்பெண் அமிர்தவள்ளி
2 நல்லதம்பி கனகரத்தினம்
இல: 14; குறுக்கு றோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.
விரோதமாக —வழக்காளிகள்

(இறந்தது) 1 இராமு நமசிவாயம்
2 நமசிவாயம் பெண் செல்லாச்சி அத்துடன் 1ம் எதிரியின் பிரதிநிதியும்
3 தம்பிராசா குருசாமி
4 பெண் கனகம்மா
5 N பஞ்சாட்சரம் அல்லது கனகரத்தினம்
6 நவரத்தினம் கைம்பெண் பாக்கியலெட்சுமி
எல்லோரும், வில்லாந்தெரு, அரியாலை
—எதிராளிகள்

மேற்சொல்லிய வழக்கில் கோட்டால் அனுப்பப்பட்ட கட்டளைப்படி 1971ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இதன்கீழ் காணப்படும் ஆதனத்தை பிரசித்த லேலத்தில் அக்காணிக்குள் நின்று விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 6620/- இதில் ரூபா 5000/-க்கு 13-8-64தொடக்கம் 7-12-65 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகை அறவிடும்வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 467-76ம், பிஸ்கால் செலவுகளும், பவுண்டேச்சும் அறவிடப்படும்.

காணியின் பெறுமதி ரூபா: 22,000/

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று வில்லியாதெரு இறை "புங்கடிவளவு" நில பர. 6 அளவுள்ள ஆட்சியின்படி கி. பர. 7ம், வீடும், குசினியும், கிணறும், பயிர்களும், எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் தங்கம்மாவின் ஆதனம், வடக்கு கணபதிப்பிள்ளை தம்புவின் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி பெண் நல்லம்மாவின் ஆதனம், தெற்கு றோட்டு: (D. 275/274ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

சி. அ. மகாதேவன்
பிஸ்கால் கந்தோர், வடமாகாண பிஸ்காலுக்காக
யாழ்ப்பாணம். 5-4-71 20, 23-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்
வழ. இல. M B 11478
பொன்னையா மாக்கிஸலை
பொற்பதி றோட், கொக்குவில்
யாழ்ப்பாணம் —வழக்காளி
எதிராக
செல்லத்தம்பி மார்க்கண்டு
அலியன் மயில்வாகனம், அரியாலை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11478 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆ. மே ௴ 7-ம் திகதி (7-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1058-25ம், 15-2-70 தொடக்கம் 11-10-70 வரைக்கும் ரூபாய் 750/-க்கு 12 வீத வட்டியும் அதன்முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 285-47

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி கண்டுக்குளி கோவிற்பற்று வில்லியாதெருஇறை ஆருக்காடுவளவு' நி. பர. 2½ வான் பயிர்களும், எல்லை கிழக்கு: ஆறுமுகத்தின் மனைவி தங்கமுத்துவின் ஆதனம் வடக்கு சின்னத்துரையின் மனைவி தங்கம்மாவின் உரிமையாதனம். மேற்கும், தெற்கும் ஒழுங்கை.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்
நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை, 10-4-71.
எம். 13 23-4-71.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 23—4—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

### யாழ். வண்ணை, ஸ்ரீ வெங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் திருப்பணி வேலைகள் செய்யுமுகமாக இன்று ந. ப. 12 மணிக்கு சுவாமி வாலஸ்தாபனம் செய்யப்படும். இது சம்பந்தமான கிரியைகள் 21-4-71 முதல் நடைபெற்று வருகின்றன.

## உலகப்பொதுநெறி

கவியோகி சுத்தானந்த பாரதியாரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் "உலகப் பொதுநெறி" என்னும் கைக்கடக்கமான சிறு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளனர், கவியோகி சுத்தானந்த பாரதியார் உலகப் பொதுநெறிகளை அகர வரிசைப்படி யாத்து அளித்துள்ளார்.

### பேராதனைச் சர்வகலாசாலை

முன்தெரிவித்தவண்ணம் பேராதனைச் சர்வகலாசாலை 27-4-71 ல் திறக்கப்படமாட்டாதென அறிகின்றோம், திறக்கப்படும் திகதி பின்னர் தெரிவிக்கப்படும்.

### அரசினர் காரியாலயங்கள்

அரசினர் காரியாலயங்கள் 21-4-71 தொடக்கம் முற்பகல் 8-30 தொடக்கம் பி. ப. 3-30 மணி வரை கடமையாற்றும் புகையிரத பஸ் சேவைகள் இவ்வொழுங்குக்கு அமைய திருத்தியமைக்கப்படும்.

### யாழ். மத்திய கல்லூரித் தமிழ் மன்றம்

யாழ்ப்பாண மத்திய கல்லூரித் தமிழ் மன்ற உத்தியோகத்தர் தெரிவு, ஆசிரியர் ஷண்முகசுந்தரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இரா. பாலகிருஷ்ணன், உபதலைவர் வ. கிருஷ்ணசெல்வம், செயலாளர் சி. மகேந்திரராஜா. உதவிச் செயலாளர் பொ. நடராசா, பொருளாளர் க. ஜெயகாந்தன், பத்திராசிரியர் ச. வாசுதேவன், செயற்குழு: ச. ரவீந்திரலிங்கம், கே. ஸ்ரீஹரன் ப. ஆனந்தபிரசாத், ச. கேசரத்தினம், செல்வி சந்திரா தர்மலிங்கம். (ந. நி.)

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

### "மலேசியாவில் ஈழத்துச் செல்வி"



பக்தர்: "மலேசியாவில் நம (ஈழத்தைச் சேர்ந்த) 'சிவத்தமிழ்ச் செல்வி' பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அரிய சமயஉபந்நியாசங்களைச் செய்து வருகிறார்களாம்; அம்மையாரது பேராற்றலை ஆங்குள்ளவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்".

சித்தர்: "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு" எழுவது இயற்கைதானே? சிறந்த சைவ சமயப் போதகராக விளங்கும் இவரைப் பின்பற்றி, சைவஅன்பர்கள் பலர் முன் வந்து பணியாற்றவேண்டியதேவை இன்றிருப்பதை நாம் சிந்திக்கவேணும்!

"நாயன்மார் - நாதன்"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 காரைநகர் கிழக்கு, நாகலிங்கம் பரமநாதன்
2 ஷெ ஊர் பெண் ஈஸ்வரி —வழக்காளிகள்
வழ. இல: M B. 8798 எதிராக
1 காரைநகர் கிழக்கு க. சிதம்பரப்பிள்ளை கந்தையா
2 ஷெ ஊர் பெண் தங்கமுத்து —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8798-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1971-ம் ௵ வைகாசி ௴ 28-ந் திகதி (28-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த லேலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4800/-ம், ரூபாய் 4000/-க்கு 29-1-67 தொடக்கம் 6-12-67 வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 289-44 சதம் இதில் ரூபாய் 1000/-மும் ரூபாய் 1900/-மும கொடுபட்டது.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை "வேலிவங்கான்" பர நெ. இலா. பதினைவரை (பா. நெ. இலா. 14, 1/2) அளவுள்ளவின்படி பர. நெ இலா. பதினைந்து (பர. நெ. இலா. 15) எல்லை கிழக்கு நாகலிங்கம் பெண் சோதிமணிக்குரியவாதனம், வடக்கு சொல்லப்பட்ட சோதிமணிக்கும் நல்லதம்பி அம்பலவாணருக்குமுரிய காணிகள். மேற்கு கந்தர் ஞானப்பிரகாசத்திற்குரியவாதனம். தெற்கு கந்தர் கணபதிப்பிள்ளைக்குரியவாதனம். இதடங்கலும்.

2. ஷெ இறை "கிணைப்புலம்" பர. கி. இலா. 4¾ அளவுள்ள, அளவின்படி பர. கி. இலா. ஆறு (பர. கி. இலா. 6) பனைகளும் மற்றும் பயிர் வகைகளும், வீடுகளும், எல்லை கிழக்கு அம்பலவாணர் சபாபதிப்பிள்ளைக்குரியவாதனம், வடக்கு றோட்டு மேற்கு கந்தன் நாராணிக்குரியவாதனம். தெற்கு கீழே விபரிக்கப்படும் 3ம் ஆதனம். இதடங்கலும்.

3. ஷெ யிறை "கொத்தியாவெளி" பர. கி. இலா. எட்டு (பர. கி. இலா 8) பனைகள், வடலிகளும், எல்லை கிழக்கு கந்தன் மாரிமுத்துவிற்கும் சகோதரனுக்குமுரியவாதனம், வடக்கு மேற்கூறிய இரண்டாம் ஆதனம், மேற்கு கந்தன் நாராணிக்குரியவாதனம், தெற்கு தண்ணீர் ஓடும் வாய்க்கால், இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

காரைநகர் வை. ஏரம்பமூர்த்தி
1971-ம் ௵ பங்குனி ௴ 27-ம் திகதி. கொமிசனரும்
எம். 19 23—4—71 விலைமதிப்பாளரும், ஏல விற்பனையாளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்; M B 10834

தம்பு சின்னத்துரையின் மகள் சகுந்தலாதேவி அளவெட்டி
எதிராக —வழக்காளி.
(1) கண்டப்பிள்ளை செல்லையாவும் மனைவி
(2) பாக்கியப்பிள்ளை இருவரும் பொன்னாலை தெரு ஊரெழுவு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10834-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971 ௵ வைகாசி ௴ 21-ந் திகதி (21-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 7615-ம் 22-5-69 தொடக்கம் 1-4-70 வரைக்கும் ரூபா 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 506-91 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று ஊரெழுவு இறை சிமாந்தபுலமும் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு (9) ஒன்பதும் செய்பயிர்களும் வான் பயிர்களும் கிணறும் தென்கிழக்கிலுள்ள இதே பேர் வழிகொண்ட காணியில் உள்ள கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரிமையும் கொண்ட ஆதனம், கிழக்குஎல்லை தண்ணீர் வாய்க்காலும் அம்பலவாணரின் கைம்பெண் பொன்னம்மாவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு இராமுவின் மனைவி வள்ளிப்பிள்ளையின் ஆதனமும் மறு பேரும். தெற்கு இரண்டாம் எதிராளியின் ஆதனம்.

சி. செ. பாலசிங்கம்
அராலி வடக்கு கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை. 6-4-71 எம். 12 23-4-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பளை கிழக்கு பூதப்பிள்ளை சுப்பையா —வழக்காளி
வழ. இல: M B 11129 எதிராக
1. தம்பு அமிர்தலிங்கமும் பெண் 2 மகேஸ்வரி (இருவரும் மாவிட்டபுரம், தற்பொழுது காவேரடி, தனியூற்று முள்ளியவளை)
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11129-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971 ம் ஆ வைகாசி மாதம் 15-ம் திகதி [15-5-71] சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3240/-ம், 26-9-69 தொடக்கம் 7-5-1970 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 421-10 இதில் வட்டிக்கணக்கால் ரூபாய் 180/- கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறை "ஊரிவத்தை" பர. நில இலா 4, 1/8 பனைகள் இளையதும், முதியதும் இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ஆறுமுகத்தி கணபதிக்குரிய ஆதனம், மேற்கு றோட்டு, தெற்கு தர்ம ஆதனமும் போவதற்குரிய பாதையும், இதடங்கலும் சொரியலாக 2/5 பங்கும், அதைச் சேர்ந்தவைகளும்.

20, பெருமான்கோவில் நா. ஸ்ரீஇரங்கநாதன்
வடக்கு ஒழுங்கை. கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்,
யாழ்ப்பாணம், 19-4-71 எம் 16 23-4-71